ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 3.8 – நல்லதோர் தாமரை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.8 – நல்லதோர் தாமரை

‡ நல்லதோர் தாமரைப் பொய்கை ⋆
நாண் மலர் மேல் பனி சோர ⋆
அல்லியும் தாதும் உதிர்ந்திட்டு ⋆
அழகழிந்தால் ஒத்ததாலோ ⋆
இல்லம் வெறியோடிற்றாலோ ⋆
என் மகளை எங்கும் காணேன் ⋆
மல்லரை அட்டவன் பின் போய் ⋆
மதுரைப் புறம் புக்காள் கொலோ ॥ **3.8.1** ॥

ஒன்றும் அறிவொன்றில்லாத ⋆
உருவறைக் கோபாலர் தங்கள் ⋆
கன்று கால் மாறுமா போலே ⋆
கன்னி இருந்தாளைக் கொண்டு ⋆
நன்றும் கிறி செய்து போனான் ⋆
நாராயணன் செய்த தீமை ⋆
என்றும் எமர்கள் குடிக்கு ⋆
ஓர் ஏச்சுக்கொல் ஆயிடுங்கொலோ ॥ **3.8.2** ॥

குமரி மணம் செய்து கொண்டு ⋆
கோலம் செய்தில்லத்திருத்தி ⋆
தமரும் பிறரும் அறியத் ⋆
தாமோதரற்கென்று சாற்றி ⋆
அமரர் பதியுடைத் தேவி ⋆

அரசாணியை வழிபட்டு ⋆
துமிலம் எழப் பறை கொட்டித் ⋆
தோரணம் நாட்டிடுங்கொலோ ॥ **3.8.3** ॥

ஒரு மகள் தன்னை உடையேன் ⋆
உலகம் நிறைந்த புகழால் ⋆
திருமகள் போல வளர்த்தேன் ⋆
செங்கண் மால் தான் கொண்டு போனான் ⋆
பெரு மகளாய்க் குடி வாழ்ந்து ⋆
பெரும் பிள்ளை பெற்ற அசோதை ⋆
மருமகளைக் கண்டுகந்து ⋆
மணாட்டுப் புறம் செய்யுங்கொலோ ॥ **3.8.4** ॥

தம் மாமன் நந்தகோபாலன் ⋆
தழீ இக்கொண்டென் மகள் தன்னை ⋆
செம் மாந்திரே என்று சொல்லிச் ⋆
செழுங்கயற் கண்ணும் செவ்வாயும் ⋆
கொம்மை முலையும் இடையும் ⋆
கொழும்பணைத் தோள்களும் கண்டிட்டு ⋆
இம் மகளைப் பெற்ற தாயர் ⋆
இனித் தரியார் என்னுங்கொலோ ॥ **3.8.5** ॥

வேடர் மறக்குலம் போலே ⋆
வேண்டிற்றுச் செய்தென் மகளை ⋆
கூடிய கூட்டமே யாகக் ⋆
கொண்டு குடி வாழுங்கொலோ ⋆
நாடு நகரும் அறிய ⋆
நல்லதோர் கண்ணாலம் செய்து ⋆

சாடிறப் பாய்ந்த பெருமான் ⋆
தக்கவா கைப்பற்றுங்கொலோ ॥ **3.8.6** ॥

அண்டத்தமரர் பெருமான் ⋆
ஆழியான் இன்றென் மகளை ⋆
பண்டப் பழிப்புக்கள் சொல்லிப் ⋆
பரிசற ஆண்டிடுங்கொலோ ⋆
கொண்டு குடி வாழ்க்கை வாழ்ந்து ⋆
கோவலப் பட்டம் கவித்து ⋆
பண்டை மணாட்டிமார் முன்னே ⋆
பாது காவல் வைக்குங்கொலோ ॥ **3.8.7** ॥

குடியில் பிறந்தவர் செய்யும் ⋆
குணம் ஒன்றும் செய்திலன் அந்தோ ! ⋆
நடை ஒன்றும் செய்திலன் நங்காய் ! ⋆
நந்தகோபன் மகன் கண்ணன் ⋆
இடை இரு பாலும் வணங்க ⋆
இளைத்திளைத்தென் மகள் ஏங்கிக் ⋆
கடைகயிறே பற்றி வாங்கிக் ⋆
கை தழும்பேறிடுங்கொலோ ॥ **3.8.8** ॥

வெண்ணிறத் தோய் தயிர் தன்னை ⋆
வெள்வரைப் பின் முன் எழுந்து ⋆
கண் உறங்காதே இருந்து ⋆
கடையவும் தான் வல்லள் கொலோ ⋆
ஒண்ணிறத் தாமரைச் செங்கண் ⋆
உலகளந்தான் என் மகளை ⋆

பண் அறையாப் பணிகொண்டு ⋆
பரிசற ஆண்டிடுங்கொலோ ॥ **3.8.9** ॥

‡ மாயவன் பின் வழி சென்று ⋆
வழியிடை மாற்றங்கள் கேட்டு ⋆
ஆயர்கள் சேரியிலும் புக்கு ⋆
அங்குத்தை மாற்றமும் எல்லாம் ⋆
தாயவள் சொல்லிய சொல்லைத் ⋆
தண் புதுவைப் பட்டன் சொன்ன ⋆
தூய தமிழ் பத்தும் வல்லார் ⋆
தூ மணி வண்ணனுக்காளரே ॥ **3.8.10** ॥

அடிவரவு — நல்லது ஒன்றும் குமரி ஒரு தம்மாமன் வேடர் அண்டத்து குடியில் வெண்ணிறம் மாயவன் என்னாதன்

நல்லதோர் தாமரை முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்